9th August 1966

துறையில் ஹெட்கான்ஸ்டபிள்கள் நிலைக்கு மேற்பட்ட பிற பணி யாளர்களின் சம்பள விகிதத்தை மாற்றியமைக்கும் செயற் குறிப்பு எதுவும் இல்லை.

திரு. வை. சங்கரன் : போலீஸ் அலுவலர்கள் வெளியிடங் களுக்குச் செல்லும்போது அவர்களுக்குக் கொடுக்கப்படும் அலவன்ஸ் குறைவாக இருக்கிறது என்று முன்பே கூறப்பட்டது. அவைகளையும் அதிகரிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஓரளவு கூட்டியிருப்பதாக ஞாபகம். தனியாகக் கேள்வி போட்டால் பார்த்துச் சொல்லலாம்.

Chemical fertilisers

* 267 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether it is a fact that two wagon loads of about 810 bags of chemical fertilisers were seized recently at Somanur Railway Station, near Coimbatore by the Vigilance Cell of the C.I.D. Police as booked without valid permits; and

(b) if so, the details thereof?

THE HON. SRI P. KAKKAN : (a) Yes.

(b) A case against the persons who booked the fertilisers. for contravening provisions of the Fertiliser Control Order, 1957 has been filed and is pending disposal in the District Magistrate's Court at Coimbatore.

திரு. வை. சங்கரன் : யார் அந்த நபர்கள் ? அதோடு ரெயில்வே அதிகாரிகளும் உடந்தை என்று விசாரித்துக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : கேஸ் கோர்ட்டில் இருப்பதால் இப்போது சொல்லுவதற்கில்லை.

சிதம்பரம் தாலூகாவுக்கு டிராக்டர்கள்

* 268 கேள்வி—திரு. சி. சிவசுப்பிரமணியம் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

தென்னார்க்காடு மாவட்டம், சிதம்பரம் தாலூகாவிற்கு 1965-66-ல் விவசாயத்திற்காக வாடகைக்கு விடும் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட டிராக்டர்கள் எத்தனை ?

கனம் திரு. பூ. கக்கன் : இரண்டு.

Water for irrigation

* 269 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether any scheme has been envisaged and undertaken to tap underground water to supplement irrigation in the various delta-areas of the State; and

(b) if so, the details thereof?